# பத்திரிக்கை செய்தி

## கிறித்துவ தேவாலயங்களை பழுதுபார்த்தல் மற்றும் சீரமைத்தல் பணிகள் மேற்கொள்வதற்கு அரசு நிதி உதவி வழங்குதல்

## கரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கோவிந்தராஜ், இ.ஆ.ப., அவர்கள் தகவல்

தமிழ்நாட்டில் சொந்தக்கட்டிடங்களில் இயங்கும் கிறித்துவ தேவாலங்களை பழுதுபார்த்தல் மற்றும் சீரமைத்தல் பணிகள் மேற்கொள்வதற்கு நடப்பாண்டில் (2016–17) நிதி உதவி வழங்கும் திட்டத்தை அரசால் செயல்படுத்தப்படுகிறது.

**இத்திட்டத்தின் கீழ் நிதி உதவி பெறுவதற்கான தகுதிகள்:**

1. கிறித்துவ தேவாலயம் 10 ஆண்டுகளுக்கு மேலாக சொந்த கட்டடத்தில் இயங்கி இருத்தல் வேண்டும். தேவாலயம் கட்டப்பட்ட இடம் பதிவுத்துறையில் பதிவு செய்திருத்தல் வேண்டம். தேவாலயமும் பதிவு செய்திருக்க வேண்டும்.
2. தேவாலயத்தினை சீரமைப்பு பணிக்காக வெளி நாட்டிலிருந்து எவ்வித நிதி உதவியும் பெற்றிருத்தல் கூடாது. சான்றிதழ் (பிற்சேர்க்கை–III) அளிக்க வேண்டும்.
3. சீரமைப்பு பணிக்காக ஒரு முறை நிதி உதவி அளிக்கப்பட தேவாலத்திற்கு மறுமுறை நிதி உதவி 5 ஆண்டுகளுக்கு பின்னர் வழங்கப்படும்.

    விண்ணப்ப படிவத்தை பிற்சேர்க்கை– III உள்ளவாறு சான்றிதழ் மற்றும் அனைத்து உரிய ஆவணங்களுடன் கரூர் மாவட்ட ஆட்சித்தலைவருக்கு 31.01.2017க்குள் விண்ணப்பிக்க வேண்டும். இதற்கான விண்ணப்பபடிவம் மற்றும் சான்றிழ் இணையதள முகவரியில் www.bcmbcmw@tn.gov.in- ல் வெளியிடப்பட்டுள்ளது. இதனை படியிறக்கம் செய்தும் விண்ணப்பிக்கலாம்.

மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையிலான குழு அவ்விண்ணப்பங்களை அனைத்து உரிய ஆவணங்களுடன் பரிசீலித்து, கிறித்துவ தேவாலங்களை ஸ்தல ஆய்வு மேற்கொள்ளப்படும். கட்டடத்தின் வரைபடம் மற்றும் திட்ட மதிப்பீடு ஆகியவற்றுடன் தகுதியின் அடிப்படையில் தேர்வு செய்து உரிய முன்மொழிவுகளுடன் சிறுபான்மையினர் நல ஆணையருக்கு நிதி உதவி வேண்டி பரிந்துரை செய்யப்படும். நிதி உதவி இரு தவணைகளாக தேவாலத்தின் வங்கிக்கணக்கில் மின்னணு பரிவர்த்தனை மூலம் செலுத்தப்படும் என மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கோவிந்தராஜ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

மாவட்ட ஆட்சித்தலைவர்,<br>கரூர்